23.07.2025.

**கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )**

**விழுப்புரம்**

**அமர்வு வழக்கு எண்.35/2025**

அ.சா.6

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அப்துல் சமது | | |
| த/பெ | அப்துல் மஜீத் | | |
| கிராமம் | ஜானகிபுரம் | தொழில் | |
| தாலுக்கா | விழுப்புரம் | வயது | 47 /2025 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | 23.07.2025 |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிராமணம் செய்யவிக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் ஜானகிபுரத்தில் மளிகை கடை வைத்து நடத்தி வருகிறேன். கடந்த ஒரு வருடத்திற்கு முன்பு ஒரு நாள் இரவு சுமார் 7.30 மணியளவில் நான் நடத்தி வரும் கடைக்கு அருகில், வீரப்பன், சரவணன் என்பவருக்கும், கமாலுதீன், சதாம் உசேனுக்கும் இடப்பிரச்சினை காரணமாக இருந்த முன்விரோதம் காரணமாக சண்டை நடைபெற்றது. அது சம்பந்தமாக மறுநாள் மதியம் சுமார் 12:30 மணியளவில் ஜானகிபுரம் ரவுண்டானா அருகில் தாலுக்கா காவல் நிலைய ஆய்வாளர் அவர்கள் என்னிடம் தகராறு பற்றி விசாரித்தார்கள். சம்பவம் நடந்தது உண்மையா? என்று கேட்டார்கள். ஆமாம் நான்

பார்த்தேன் என்று சொன்னேன். என்னை ஆய்வாளர் விசாரித்துவிட்டு, கையெழுத்து போட்டு விட்டுப் போ என்று சொன்னார். அதனால் நான் கையெழுத்து போட்டேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம், கைப்பற்றுதல் மகசர் ஆகியவைகளில் உள்ள 1ம் கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்துக்கள் முறையே அ.சா.ஆ.4, 5 ஆகும்.

**<u>(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது.</u>**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

கடந்த 05/08/2024 மதியம் சுமார் 1:30 மணியளவில், ஜானகிபுரம் ரவுண்டானா அருகில், ஜானகிபுரம் கமாலுதீன், சதாம் உசேன் ஆகியோர்களை தாக்கிய வழக்கில் தலைமறைவாக இருந்த எதிரிகளான சரவணன், வீரப்பன் ஆகியோர்களை விழுப்புரம் தாலுக்கா காவல் நிலைய ஆய்வாளர் அவர்கள் என் முன்னிலையில் கைது செய்தார் என்றும், அப்போது எதிரிகள் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துக் கொண்டார்கள் என்றும், அதில் சரவணன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை ஆய்வாளர் அவர்கள் பதிவு செய்தார்கள் என்றும், அதில் என்னிடமும், ரஹ்மத்துல்லா என்பவரிடமும், கையொப்பம் பெற்றார்கள் என்றும், அப்போது அவர் தன் இடுப்பில் மறைத்து வைத்திருந்த ஒரு கத்தியை எடுத்து ஆஜர் செய்வதாக கூறி ஆஜர் செய்தார் என்றும், அதை ஆய்வாளர் அவர்கள் 2.00 மணியளவில் எங்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினார் என்றும், அதிலும் நானும், ரஹ்மத்துல்லாவும் கையொப்பம் செய்தோம் என்று சொல்லிவிட்டு, எதிரிகளை காப்பாற்ற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் கையெழுத்து போட்டதாக சொன்ன தாளில் என்ன இருந்தது என்று எனக்கு தெரியாது.

**2 ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1 ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணையை 2 ம் எதிரி தமதாக ஏற்றுக்கொண்டார்.

**மறுவிசாரணை**

**இல்லை**